கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

முழுமையாக அரசாங்கத்திற்கு உடமையான கம்பனி

ஆண்டறிக்கை
2017/2018

தலைமை அலுவலகம்
561/3,
எல்விட்டிகல மாவத்தை,
நாராஹென்பிட்டிய,
கொழும்பு - 05

சுரங்கம்
கஹடகஹ சுரங்கம்
மதுராகொட
தொடங்கஸ்லந்த

தொலைபேசி : 011- 2368738
தொலைநகல் : 011- 2058062
மின்னஞ்சல் : kgll@sltnet.lk
இணையத்தளம் : www.kgraphite.lk

தொலைபேசி : 0372252015
தொலைநகல் : 0374931711

பொருளடக்கம்

அறிமுகம்	01
தலைவரின் கண்ணோட்டம்	02
கணக்காய்வுக் குழு அறிக்கை	05
கூட்டு நிறுவனத் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்	06
நிறுவனக் கட்டமைப்பு	07
பணிப்பாளர்களின் அறிக்கை	08
நிதிசார் வெளிப்பாடுகள்	12
வருடாந்தக் கணக்குகள்	13
கூட்டம் பற்றிய அறிவித்தல்	14
பதிலாள் படிவம்	15

அறிமுகம்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

கஹடகஹ சுரங்கம் இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் மதுரகொட, **தொடங்கஸ்லந்தவில்** கொழும்பு பிரதான நகரத்தில் இருந்து சுமார் 90 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுடன் **கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால்** (கேஜீஎல்எல்) முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இது முழுவதுமாக அரசாங்கத்தின் உடமையான மக்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி என்பதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு கைத்தொழில், வாணிப அமைச்சின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். கம்பனியின் பிரதான பங்குதாரர் **பொதுத் திறைசேரியின் செயலாளர்** ஆவார். கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் பிரதான கொள்கை ஆக்க அமைப்பு, நிறைவேற்றுத் தலைவரால் தலைமை வகிக்கப்படும் பணிப்பாளர்கள் சபையாவதுடன் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் அதன் நேர் வரிசை அமைச்சு மற்றும் பொறுப்புத் திறைசேரியிடம் இருந்து அதன் கூட்டு நிறுவனக் கொள்கையின் சாராம்சத்தைப் பெறுகின்றது.

கஹடகஹ சுரங்கம், ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவில், தொடங்கஸ்லந்த, மதுரகொடவில் மலைசார்ந்த பிரதேசத்தில் 25 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளதுடன் காணியின் விஸ்தீரணம் ஏறத்தாழ 102 ஏக்கர்களாகும். 102 ஏக்கர் காணியின் மேற்பரப்பில் 76 ஏக்கர்களில் தென்னைப் பயிர்ச்செய்கை கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால் கையாளப்படுகின்றது.

இலங்கையில் போகல சுரங்கம் மற்றும் கஹட்டகஹ சுரங்கம் ஆகிய பிரபல்யமான இரு பிரதான சுரங்கங்கள் உள்ளன. கஹட்டகஹ சுரங்கம் இரு சுரங்களின் ஒன்றிணைப்பாகும். கஹடகஹ மற்றும் கொலங்கஹ சுரங்கங்கள் என 1872 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பட்டு 1973 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டதை அடுத்து இரு சுரங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே சுரங்கமாக செயற்பட்டுவருகின்றது.

சுரங்கம் 2000 அடி 610 (மீற்றர்) ஆழமாக இருப்பதுடன் இதுவே இலங்கையில் உள்ள ஆழமான சுரங்கமாகும். சுரங்கத்தை அடைவதற்கு 2 துளைகொண்ட வழிகள் உள்ளன. கஹடகஹவில் உள்ள துளையின் ஆழம் 1132 அடி (345மீற்றர்) அளவிலும் கொலோன்கஹ 330 அடிவரை (101 மீற்றர்) ஆழமானதாகும். துளைகள் இரு வேறு பகுதிகளினால் சுரங்கத்தை அடைகின்றன. துளையின் அடிவாரத்தில் கீழ் மட்டத்தில் 2000 அடி (610 மீற்றர்கள்) மட்டத்தை அடையும் வரை இழுவைப் பொறிமுறைகள் உள்ளன. பிரதான துளையும், இழுவைப் பொறிமுறையும் சுரங்கத்தின் பல்வேறு மட்டங்களிற்கு நிலக்கீழ் தொழிலாளர்களை 1132 அடி முதல் 2000 அடி மட்டம் வரை ஒன்று திரட்டுவதற்காகவும் சுரங்க அகழ்வுகளை வெளியே கொண்டு வருவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. சுரங்கத்தில் 500 மீற்றர்கள் வரையான ஆழம் வரையே அதன் அகலமான பகுதியாகும்.

கஹடகஹ உற்பத்தியின் தனித்துவம்

உயர்ந்த இரக இயற்கைத் திரள் வகைப் பளிங்குருக் காரீயத்திற்கென வணிகரீதியான ஒரேயொரு வழங்குனர் இலங்கையாகும். குறிப்பாக கஹட்டகஹ காரீய சுரங்கத்தில் இருந்து 99% மேற்பட்ட காபனைக் கொண்ட அதி தூய இயற்கைத் திரள்வகைக் காரீயம் பூரண பளிங்குரு வடிவில் அகழ்ந்தெடுக்கப்பட்டுவருகின்றது. இவை திரள், ஊசியுரு, நுண்தகட்டு வகை மற்றும் கீற்று வடிவில் அமைந்துள்ளது. இயற்கைப் பளிங்குருத் திரள்வபைக் காரீயச் சந்தையின் ஏகபோக உரிமையைப் பெற்ற இழிவளவு மாசுக்களை உடைய உயர் சதவீத காபனைக் கொண்ட பளிங்குருத் திரள்வகைக் கஹடகஹ காரீயம் உலக சந்தையில் தனித்துவம் மிக்க உற்பத்திப் பொருளாக அங்கீகாரம் பெற்று அதன் நற்பெயர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தலைவரின் கண்ணோட்டம்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் (கேஜீஎல்எல்) தொடர்பாக மீளாய்வுக் காலப்பகுதியின் பெரும் பகுதி நேரடியாக எனது கடமைக்காலத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் 2020.02.13 அன்று தலைவராக எனது கடமைகளைப் பொறுப்பேற்று 2017/2018 காலப்பகுதிக்கான தலைவரின் மீளாய்வாக இவ் அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன். மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு, நிறுவனத்தின் செயற்திறனைப் பார்க்கும் போது கணிசமாக நேர்மறையானதாக காணப்படுகின்றது.

உற்பத்தி

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டான 2017.2018 காலப்பகுதியில் 750 மெற்றிக் தொன் மூலக் காரீயம் பிரித்தெடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு பெறப்பட்ட 811 மெற்றிக்தொன் காரீயத்துடன் ஒப்பிடுகையில் 7.52மூ வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. புதிய வாடிக்கையாளர்களிடமிருந்து வருங்கால கட்டளைகளை வழங்குவதற்காக உற்பத்தியை அதிகரிப்பதற்காக கடந்த ஆண்டு நிறுவனம் உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்திட்டத்தை செயற்படுத்தியது. ஆனால் நடப்பு ஆண்டில், உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் எதிர்பார்த்தபடி செயற்படுத்தப்படாததனால், உற்பத்தி குறைந்துள்ளது. எவ்வாறாயினும், கூட்டு ஒப்பந்தத்தை மேலும் செயற்திறன் மிக்க நிலைக்கு கொண்டுவருவதற்கு நிர்வாகம் தற்போது திருத்தங்களை மேற்கொள்வதற்கு பரிசீலித்து வருகின்றது.

விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி நிலைமை

பதப்படுத்தப்பட்ட 537 மெற்றிக்தொன் காரீயம் ரூபா 123.4 மில்லியனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் கடந்த ஆண்டு பெறப்பட்ட ரூபா 112.4 மில்லியனுடன் ஒப்பிடும் போது ஏற்றுமதி வருமானம் ரூபா 11 மில்லியனால் அதிகரித்துள்ளது. இந்த மேம்பட்ட வருமானத்திற்கு அவுஸ்திரேலியா சந்தையில் இருந்து கிடைக்கப்பெற்ற 97/99%சீ தர விசேட பதப்படுத்தப்பட்ட உயர் தரக் காரீயக் கட்டளையின் காரணமாகும்.

நிதி நிலைமை

வழமையாக, பெரும்பாலான எமது கிரயக் கூறுகள் இயற்கையாகவே நிர்ணயிக்கப்பட்டவையானதுடன் வருமானக் குறைவுடன் முகாமைத்துவம் அதன் செலவினத்தைக் குறைப்பதற்கு அதி உயர் முயற்சியை எடுக்கின்றது. எனினும் கம்பனி ரூபா 2.84 மில்லியனை வரிக்கு முன்னைய இலாபமாக அறிக்கையிட்டது.

நிலத்தடி சுரங்க அபிவிருத்திகள்

எவ்வாறெனினும், குறைந்த நிதியின் கீழும் நாம் செயற்படுகின்றோம். நிலத்தடி அபிவிருத்தி வேலைகளுக்காக தேவையான பொறி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தெங்குப் பயிர்ச்செய்கையும் பெருந்தோட்ட அபிவிருத்தியும்

நாம் ஏற்கனவே 52 ஏக்கர் தென்னம் பயிர்ச்செய்கை மீள்நடுகையில் ஈடுபட்டுள்ளோம். தென்னந் தோட்டம் மிகச் சிறந்த அளவில் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதுடன் தோட்டத்தைப் பராமரிப்பதற்காக 8 ஊழியர்களை தொடர்ந்து வழங்கியுள்ளதுடன் உள் தோட்டப் பயிரினத் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளும் உரங்கள் முதலியவையும் வழங்கப்பட்டுள்ளன. உள்தோட்டப் பயிற்செய்கை கருத்திட்டத்தின் கீழ் மிளகு மற்றும் வாழைப் பயிற்ச்செய்கைகயை மேற்கொள்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையின் உதவி கிடைக்கப்பெற்று மிகவும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுவருகின்றன.

எவ்வாறெனினும், சுரங்க நிலப்பரப்பின் 102 ஏக்கர்களில் 50 ஏக்கர்கள் குறித்த காணியை இரு தரப்பினரில் ஒருவருக்கேனும் பயன்படுத்துவதற்கு நீதிமன்ற வழக்கில் கட்டளையிடப்படாமையால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளதுடன் இதன் விளைவாக காடாக மாறி கிராமத்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், முன்னாள் ஊழியர்கள் சிலர் ஊழியர் விடுதிகளில் பலவந்தமாக குடியிருக்கின்றனர். கம்பனிக்கு எந்தவித நலனும் இன்றி யொவுன் சேனாங்க மற்றும் சமுர்த்தி வங்கியால் 9 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் கம்பனிக்கு உரிய காணியின் சில பகுதிகளில் பலவந்தமாகக் குடியிருக்கப்படுவதுடன் அதிகாரமற்ற முறையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு சட்டவிரோதமான முறையில் குடியிருக்கப்படுகின்றது.

தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் பிரச்சனைகள்

வளங்களின் வினைத்திறன் மற்றும் பயனுறுதித் தன்மையை முன்னேற்றும் வகையில் முகாமைத்துவத்தின் மேலாண்மைத்துவ அணுகுமுறையின் மூலம் ஊழியர்களுடனான உறவுமுறை பேணப்பட்டது. நிலத்தடி தொழிலாளர்களின் நடத்தை அவர்களது வேலையின் சுற்றுச் சூழல் மற்றும் ஆபத்தான தன்மை காரணமாக வெளித்தள தொழிலாளர்களினதில் இருந்தும் வேறுபட்டதாகும்.

பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் பாதுகாப்புச் சீருடைகள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஊழியர்களைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உயர்த்தி முறைமைகள் உள்ளடங்கலாக நிலத்தடி உபகரணங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளன. ரிதீகம வைத்தியசாலையில் இருந்து அரசாங்க வைத்தியர் ஒருவர் சுரங்க வளாகத்திற்கு ஒரு வாரத்திற்கு ஒரு முறை வருகை தந்து தொழிலாளர்களினதும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சுகாதார நிலையைப் பரிசோதித்து வருகின்றார். எமது மருத்துவ நிலையம் சிறந்த அனுபவம் வாய்ந்த ஆண் தாதி உட்பட சகல அடிப்படை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியமான அவசர மருந்துகளுடன் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

மீளாய்வாண்டின் போது கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால் ஈட்டப்பட்ட எந்தவித வெற்றியும் இந் நிறுவகத்தின் சகல ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடமை உணர்ச்சி இல்லாது சாத்தியமானதல்ல. குறிப்பாக நிலத்தடி தொழிலாளர்கள். நிலத்தடி தொழிலாளர்களின் இத்தகைய பங்களிப்பு இவர்கள் எந்த வேளையிலும் ஆபத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளமையால் எப்போதும் நினைவுகூரப்பட வேண்டியதுடன் மெச்சப்பட வேண்டியதாகும்.

மீளாய்வாண்டின் போது கூட்டுப் பணிப்பாளர்களும் கம்பனியின் நலனுக்காக தமது மட்டற்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

நான் இந்த சந்தர்ப்பத்தை கௌரவ கைத்தொழில் அமைச்சர், கௌரவ கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளர் மற்றும் கைத்தொழில் அமைச்சின் ஊழியர்கள், திறைசேரி செயலாளர் மற்றும் ஊழியர்கள் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்கிய திறைசேரிச் செயலாளர் மற்றும் ஊழியர்களுக்கும் மற்றும் குறிப்பாக பணிப்பாளர் சபைக்கும் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட் நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன். இறுதியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கும் கணக்காளர்களுக்கும் அவர்களது ஊழியர்களுக்கும் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் கணக்காய்வாளர்களாக எவ்வித தயக்கமும் இல்லாது இவ்வாண்டிலும் தமது திருப்திகரமான சேவையை வழங்கியமைக்காக எமது நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொறியியலாளர். நீல் வத்துஹேவா
தலைவர்
கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்
22 நவம்பர் 2021

கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் பணி

கணக்காய்வுக் குழுவின் பிரதான குறிக்கோள், நிதி அறிக்கையிடல், இடர் முகாமைத்துவத்தின் ஒருமைப்பாட்டின் மிக உயர் தரங்களை ஊக்குவித்துப் பாதுகாப்பதுடன் நியதிச்சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செயற்பட்டு காத்திரமான உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணுவதாகும்.

கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

கணக்காய்வுக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியதாகும். இவர்களில் ஒருவர் கம்பனியின் ஒரே பங்குதாரரான திறைசேரியால் முன்மொழியப்படுபவரின் தலைமையின் கீழும் சபையின் செயலாளரை அழைப்பாளராகக் கொண்டதாகவும் அமையப்பெற்றுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவின் அமைப்பு பின்வருமாறானதாகும்:

திரு.ஏ.டி.எல்.ஜி.கலன்சூரிய	–	தலைவர்
திரு. ஜனித் டினுக் ெ~ாக்மன்	–	பணிப்பாளர்
திரு. டபில்யூ.என்.ஆர்.தமித் மேவன்	–	பணிப்பாளர்
திருமதி.நிலானி ஜயசிறி	-	கணக்காய்வாளர் நாயகத் திணைக்கத்தின் பிரதிநிதி – அவதானிப்பாளர்
திரு.பி.கே.எம்.ஜே.ரொட்ரிகோ		பிரதான உள்ளக கணக்காய்வாளர், கைத்தொழில் அமைச்சு, அவதானிப்பாளர்

கூட்டங்களும் அமர்வுகளும்

குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்படுவதுடன் நான்கு கூட்டங்கள் 2018 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்தது. கம்பனியின் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சால் நியமிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளரும் கணக்காளரும் தேவை ஏற்படும் போது கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படுகின்றனர்.

செயற்பாடுகள்

கணக்காய்வுக் குழு, வரைவுக் கணக்குகள், வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தும் கலந்தாலோசித்தும் தனது கடமைகளை நிறைவேற்றியது. கணக்காய்வுக் குழு இவ் அறிக்கைகளை மீளாய்வு செய்து தற்போதைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் கம்பனி எதிர்நோக்கும் மோசடி, தவறுகள், செயற்பாட்டு, நிதிசார் இடர்கள் நிகழ்வதற்கான சாத்தியப்பாட்டையும் அதனாலான விளைவுகளையும் இழிவளவாக்குவதற்காக செயற்படுத்தக்கூடிய மேலதிகக் கட்டுப்பாடுகளையும் இடர் நீக்கல் மூலோபாயங்களையும் பரிந்துரைத்துள்ளது.

ஒவ்வொரு கூட்டத்தின் போதும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் உள்ள விடயங்ளை ஆழமாக கலந்தாலோசித்து வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக கலந்துரையாடல்களை அடுத்து தீர்மானங்களை எடுப்பதற்காக சில விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

குழு வெளிவாரி கணக்காய்வாளர் 2017/2018 ஆம் ஆண்டிற்காக உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியுள்ளமையையும் அவதானித்தது.

குழுவின் சார்பாக

கணக்காய்வுக்குழுத் தலைவர்
26.11.2021

கூட்டு நிறுவனத் தொலைநோக்கு

"உலகில் இயற்கையான பளிங்குருத் திரள் வகைக் காரீயத்தின் தனித்துவமான மூலமாக விளங்குதல்"

கூட்டு நிறுவனப் பணி

"நாட்டில் காரீயக் கனிப்பொருள் மூலங்களில் உச்சப் பயன்பாட்டுடன் அன்னிய செலாவணியைச் சம்பாதிப்பதன் மூலம் இலங்கைப் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனான செயலாக்கமுள்ள ஓர் பங்குதாரராக இருத்தல்"

கூட்டு நிறுவனக் குறிக்கோள்கள்

"உயர்தரமான தூய்மையான காரீயத்தை ஏற்றுமதி செய்வதற்காக அகழ்தல், பதப்படுத்தல், மற்றும் உயர்ந்த பட்ச பெறுமதியைச் சேர்த்தலும், காரீய அடிப்படையிலான கைத்தொழில்களை விருத்தி செய்தலுமே கம்பனியின் குறிக்கோள்களாகும்."

நிறுவனக் கட்டமைப்பு

கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட், நிறைவேற்றுத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை ஒன்றின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் தொழிற்பாடானது பின்வரும் விடயப் பரப்புகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- ✓ அகழ்தல்
- ✓ பதப்படுத்துதல்
- ✓ பொறிமுறைசார் மற்றும் மின்பொறியியல்
- ✓ சந்தைப்படுத்தல்
- ✓ தனியாள்
- ✓ நிருவாகம்
- ✓ நிதி மற்றும் கணக்கீடு
- ✓ விநியோகங்கள் மற்றும் களஞ்சியங்கள்
- ✓ பொது சிவில் பொறியியல்
- ✓ பாதுகாப்பு

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

2018 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

2018 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர்கள் இத்தால் சமர்ப்பிக்கின்றனர். இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, அதில் தெரிவிக்கப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அதன் மீதான கணக்காய்வாளர்களின் அறிக்கை 28 டிசம்பர் 2021 அன்று பணிப்பாளர்களினால் அங்கீகரிக்கப்பட்டது.

பிரதான செயற்பாடுகள்

கம்பனியின் பிரதான செயற்பாடுகள் :

1. 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலால் உருவாக்கப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலொன்கஹ, கஹட்டகஹவில் குறித்தொதுக்கப்பட்ட வணிக அலுவல்களை வெற்றிகரமான முறையில் கொண்டுநடாத்தல்.

2. கூறப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலொன்கஹ, கஹட்டகஹ எனக் குறித்தொதுக்கப்பட்ட பகுதியால் உடமையாக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட அசையும், அசையாச் சொத்துக்களின் சொத்துடமைக்கு பின்னுரிமையாளராகுதல்.

தொழிற்பாடுகளின் மற்றும் நிதியில் முனைப்புறுத்தல்களின் மீளாய்வு
இலாப அல்லது நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, நிதியியல் நிலைமைக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று மற்றும் நிதியியல் குறிப்புகளை உள்ளடக்கிய 31 மார்ச் 2018ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுகள் ஆண்டறிக்கையின் 03 தொடக்கம் 24 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுகளுக்கான பணிப்பாளர்களினதும் கணக்காய்வாளர்களினதும் உரிய பொறுப்புகள்

நிறுவனத்தின் விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை முன்வைக்கும் வகையில் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையவர்களாவர். இந்த நிதி அறிக்கைகள் 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலை சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தொடர்ச்சியான பட்டியலிடப்பட்ட விதிகள் ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொண்ட கணக்கியல் கொள்கைகளின் விபரங்கள் மற்றும் வருடத்தில் இலங்கை கணக்கியல் நியமத்தில் செய்யப்பட்ட மாற்றங்களின் தாக்கம் ஆகியவைவ நிதிக் கூற்றின் 08 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டள்ளது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஒவ்வொரு ஆண்டினதும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றில் ஏற்பட்ட அசைவுகள் நிதிக்கூற்றின் குறிப்பு 20 இல் தரப்படுகின்றது.

முதலீடுகள்

ஊழியர்களின் பணிக்கொடைக் கடப்பாடுகளை வழங்குவதற்காக கம்பனி, தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் ரூபா. 2,932,674.31 தொகையை முதலீடு செய்துள்ளது.

அன்பளிப்பு

கணக்கீட்டுக் காலப்பகுதியின் போது கம்பனி அன்பளிப்புகளை மேற்கொண்டிருக்கவில்லை.

கணக்காய்வு அறிக்கை

நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர்களின் அறிக்கை ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

31 மார்ச் 2018 அன்று பணிப்பாளர்கள்

31 மார்ச் 2018 அன்று காரியாலயத்தில் இருந்த பணிப்பாளர்களின் பெயர்கள் கீழ்வருமாறு:

முழுப் பெயர்

அல் ஹாஜ் மீராசஹிபு அப்துல் மஜீட்

திரு. இஸ்மயில் மொஹமட் ஜுனைர்

திரு மொஹமட் ஷரீப் லியாகுத் அலிகான்

திருமதி. நைனானாயக்க பத்திரனலாகே அனுஜ ரொஷானி ஜயவர்தன

திரு. பந்துல சேனாதி விமலசுந்தர

திரு.உதுமன்கண்டு மொஹமட் நிஷார்

டாக்டர் பாலசூரிய முதியான்சலாகே நன்த விபுல பண்டார பாலசூரிய

பணிப்பாளர் சபை கீழ்வருமாறு பிரகடனப்படுத்துகின்றது.

1. நிறுவனம் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முரணான எந்தச் செயலிலும் ஈடுபடவில்லை.

2. நிறுவனம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ள அனைத்து பொருள் நலங்களும் மற்றும் அவர்கள் பொருள் ரீதியாக ஆர்வமுள்ள விடங்களில் வாக்களிப்பதில் இருந்து விலகினர்

3. பங்குதாரர்களை சமமாக நடத்துவதை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

4. வியாபாரமானது, தேவைக்கேற்ப அனுமானங்கள் அல்லது தகுதிகளை ஆதரிப்பதன் மூலம் தொடர்நது நடந்துகொண்டிருக்கும் எண்ணத்தில்: மற்றும் அவர்கள் நிதி, செயலாற்றுகை மற்றும் இணக்க கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்தவம் ஆகியவற்றை உள்ளடக்கிய உள் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்துள்ளனர், மேலும் அவற்றின் செயற்திறன் மற்றும் வெற்றிகரமான பின்பற்றுதல் மற்றும் அதைச் செய்ய முடியாவிட்டால் நியாயமான உத்தரவாதத்தைப் பெற்றுள்ளனர்.

பணிப்பாளர்களின் ஊதியம்

மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் மொத்த ஊதியத் தொகை நிதிக்கூற்றின் குறிப்பு 13 இல் தரப்பட்டுள்ளது.

கம்பனியின் ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

கம்பனியின் ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 06 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களின் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டள்ளன.

பணிப்பாளர் பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
அல் ஹாஜ் எம் ஏ மஜீட்	11/11
திரு. எம். எஸ். எல் அலி கான்	11/11
திரு. என் பி ஏ ஆர் ஜயவர்தன	11/11
திரு. ஐ எம் ஜுனைஸ்	11/11
திரு. பி.எஸ். விமலசுந்தர	11/11
டாக்ர் என் டபில்யூ பி பாலசூரிய	09/11
திரு. யு. எம். நிஷார்	09/11

நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு அமைவாக அரசாங்கத்திற்கும் பணிப்பாளர்களுக்கும் தொடர்புபட்ட அனைத்து நியதிச் சட்டக்கொடுப்பனவுகளும் உரிய திகதியில் செலுத்தப்பட்டு அல்லது கம்பனியின் புத்தகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதில் அவர்கள் திருப்திகரமாக உள்ளனர்.

தற்செயல் பொறுப்புகள் மற்றும் மூலதன ஈடுபாடுகள்
31 மார்ச் 2018இல் மூலதனச் செலவினங்களுக்காக செய்யப்பட்ட தற்செயல் பொறுப்புகள் மற்றும் மூலதன அர்ப்பணிப்பு ஆகியவை நிதிக் கூற்றின் குறிப்பு 8இல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள் பொருண்மைத்துவம் கவனத்தில் எடுக்கப்பட்டு, தேவையான விடத்து உரிய சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐந்தொகையின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பிறகு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஏதும் இல்லை, இது சரிசெய்தல் தேவைப்படும் நிறுவனத்தில் எந்தவொரு பொருள் விளைவையும் ஏற்படுத்தும்.

இயங்கும் நிலை
வியாபார நடவடிக்கைகளைத் தொடர நிறுவனத்திடம் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக பணிப்பாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதன்படி, நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதில் தற்போதைய அக்கறையின் அடிப்படையில் செயற்படுவது பொருத்தமானது எனப் பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

தற்செயல் பொறுப்பு
தற்செயல் பொறுப்புகள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றின் குறிப்பு 8 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர்கள்

மீளாய்வாண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வாளராகச் செயற்பட்டுள்ளார். நிதி அமைச்சின் பீஈடி சுற்றறிக்கை 01 இற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு திருவாளர்கள் ஏனர்ஸ்ட் அன்ட் யங் கம்பனி உதவியுள்ளனர். கணக்காய்வாளர்களாக அல்லாத வேறு எத்தகைய தொடர்போ அல்லது ஆர்வமோ தமக்கு இருக்கவில்லை என்பதை கணக்காய்வாளர் தலைமை அதிபதி உறுதிப்படுத்தி உள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்க நியதிகளுக்கு அமைவாக தாம் சுதந்திரமாகச் செயற்பட்டதாக உறுதிப்படுத்தியிருந்தனர்.

நிதியாண்டில் கணக்காய்வாளர்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 14 இல் தரப்பட்டுள்ளது.

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் சபையின் கட்டளைப்படி


.....	.....	.....
பணிப்பாளர்	**பணிப்பாளர்**	**எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவட்)லிமிடெட்**

நிதிசார் வெளிப்பாடுகள்

நிதிசார் வெளிப்பாடுகள்


உற்பத்தி

ஆண்டு	மெ.தொன
2008/9	877
2009/10	915
2010/11	771
2011/12	888
2012/13	1018
2013/14	848
2014/15	712
2015/16	771
2016/17	811
2017/18	750
2018/19	732
2019/20	573
2020/21	657




விற்பனை

ஆண்டு	மெ.தொன
2008/9	497
2009/10	295.2
2010/11	760.3
2011/12	850.3
2012/13	537.8
2013/14	793
2014/15	708.5
2015/16	559.0
2016/17	530
2017/18	537
2018/19	530
2019/20	413
2020/21	421




வருமானம்

ஆண்டு	ரூபா.மில்லியன்
2008/9	60.4
2009/10	21.1
2010/11	105
2011/12	128
2012/13	91.6
2013/14	143.6
2014/15	122.5
2015/16	109
2016/17	112.4
2017/18	123.4
2018/19	127.55
2019/20	126.62
2020/21	126.14



மொத்த இலாபம்

ஆண்டு	ரூபா.மில்லியன்
2008/9	44.8
2009/10	13.1
2010/11	62.4
2011/12	74.9
2012/13	53.5
2013/14	91.36
2014/15	56.35
2015/16	44.08
2016/17	45.47
2017/18	57.19
2018/19	47.89
2019/20	55.4
2020/21	49.22




வரிக்கு

ஆண்டு	ரூபா.மில்லியன்
2008/9	37.3
2009/10	1.5
2010/11	37.7
2011/12	54.3
2012/13	16.4
2013/14	21.18
2014/15	-10.84
2015/16	2.39
2016/17	-1.41
2017/18	-4.39
2018/19	-3.88
2019/20	5.6
2020/21	10.67



தெறிய சொத்துக்கள்

ஆண்டு	ரூபா.மில்லியன்
2008/9	4.4
2009/10	137
2010/11	166
2011/12	214
2012/13	423.4
2013/14	367.5
2014/15	337
2015/16	336
2016/17	334
2017/18	329.7
2018/19	325.82
2019/20	331.42
2020/21	342.03



கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

வருடாந்தக் கணக்குகள் 2017/18

2017 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்து
2018 மார்ச் 31 ஆம் திகதி வரை

கஹடகஹகிறபைட் லங்கா லிமிடட்
கணக்குகள் 2017/18

பொருளடக்கம் **பக்கம்**

கூட்டு நிறுவனத் தகவல்கள்	01
கணக்காய்வாளர்களின் அறிக்கை	02-03
விரிவான வருமானக் கூற்று	04
நிதி நிலமைக் கூற்று	05
உரிமை மூலதன மாற்றக் கூற்று	06
காசுப் பாய்ச்சற் கூற்று	07
முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்	08-14
நிதிக்கூற்றுகளின் வெளிப்படுத்துகைகள்	15
கணக்குக் குறிப்புகள்	16-23
வருமான வரிக் கணிப்பீடு	25

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கூட்டு நிறுவனத் தகவல்கள்

கம்பனியின் பெயர்
கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

சட்ட வடிவம்
நிதி அமைச்சின் கீழ் உள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

பங்குரிமை மற்றும் உரிமை
இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரிச் செயலாளரால் 100% உரிமைகொள்ளப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டிய, கொழும்பு - 05

சுரங்கம்
கஹடகஹ சுரங்கம், மதுரகொட, தொடங்கஸ்லந்த

தொடர்பு

தலைமை			**சுரங்கம்**		
தொலைபேசி	:	011- 2368738	தொலைபேசி	:	037-2252015
தொலைநகல்	:	011- 2058062	தொலைநகல்	:	037-4931711
மின்னஞ்சல்	:	kgll@sltnet.lk			
இணையத்தளம்	:	www.kgrhite.lk			

நியதிச் சட்ட நிலை
2007ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது.

கம்பனியின் பதிவு இல.
பீப்பீ 1513

2018 மார்ச் 31 இல் உள்ளவாறான பணிப்பாளர்கள்
அல்ஹாஜ் மீராஸாஹிபு அப்துல் மஜீட்
இஸ்மாயில் மொஹமட் ஜுனைஸ்
மொஹமட் சரீப் லியாகுவாத் அலிக்கான்
நைனாநாயக பதிரணஹேலாகே அனுஜா ரோஷனி ஜயவர்தன
பந்துல சேனாதி விமலசுந்தர
உதுமான்கண்டு முகமட் நிஸார்
பாலசூரிய முதியான்சலாகே நன்ட விபுல பண்டார பாலசூரிய

செயலாளர்
எக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செகடேரியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிடட்
இல. 02, காசல் ஒழுங்கை, கொழும்பு 04

கணக்காய்வாளர்கள்
இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு
உதவும் வகையில்
திருவாளர்கள் ஏர்னஸ்ட் அன்ட் யங்
பட்டயக் கணக்காளர்கள்,
இல. 201. த சேர் பிளேஸ், கொழும்பு 10

வங்கியாளர்கள்
இலங்கை வங்கி
கொள்ளுப்பிட்டி மற்றும் ரிதீகம

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. TCM/B/KGLL/17/18 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 13 May 2021

To the Shareholders of the
Kahatagaha Graphite Lanka Limited

Report of the Auditor General on the Financial Statements of the Kahatagaha Graphite Lanka Limited for the year ended 31 March 2018

The audit of the financial statements of the Kahatagaha Graphited Lanka Limited ('the Company') for the year ended 31 March 2018 comprising the statement of financial position as at 31 March 2018 and the statement of comprehensive income, statement of changes in equity and cash flow statement for the year then ended, and a summary of significant accounting policies and other explanatory information, was carried out under my direction in pursuance of provisions in Article 154 (1) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka. To carry out this audit I was assisted by a firm of Chartered Accountants in public practice.

Board's Responsibility for the Financial Statements

The Board of Directors ("Board") if responsible for the preparation and fair presentation of these financial statements in accordance with Sri Lanka Accounting Standards and for such internal control as the Board determines is necessary to enable the preparation of financial statements that are free from material misstatements, whether due to fraud or error.

Auditor's Responsibility

My responsibility is to express an opinion on these financial statements based on my audit. I conducted my audit in accordance with Sri Lanka Auditing Standards. Those Standards require that I comply with ethical requirements and plan and perform the audit to obtain reasonable assurance about whether the financial statements are free from material misstatements.

An audit involves performing procedures to obtain audit evidence about the amounts and disclosures in the financial statements. The procedures selected depend on the auditor's judgment, including the assessment of the risks of material misstatement of the financial

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

statements, whether due to fraud or error. In making those risk assessments, the auditor considers internal control relevant to the Company's preparation and fair presentation of the financial statements in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the Company's internal control. An audit also includes evaluating the appropriateness of accounting policies used and he reasonableness of accounting estimates made by Board, as well as evaluating the overall presentation of the financial statements.

I believe that the audit evidence I have obtained is sufficient and appropriate to provide a basis for my audit opinion.

Opinion

In my opinion, the financial statements give a true and fair view of the financial position of the Company as at 31 March 2018, and its financial performance and cash flows for the year then ended in accordance with Sri Lanka Accounting Standards.

Report on Other Legal and Regulatory Requirement

As required by Section 163 (2) of the Companies Act No.07 of 2007. I state the followings:

a. The basis of opinion and scope and limitations of the audit are as stated above.
b. In my opinion:
   - I have obtained all the information and explanations that were required for the audit and as for as appears from my examinations, proper accounting records have been kept by the Company
   - The financial statements of the Company comply with the requirements of Section 151 of the Companies Act No. 07 of 2007.

Report to Parliament

My report to Parliament in pursuance of provisions in Article 154 (6) of the Constitution will be tabled in due course.

W.P.C. Wickramarathne
Auditor General

கஹடகஹ கிறபைட் லங்காலிமிடெட்

விரிவான வருமானக் கூற்று

மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டு	**குறிப்பு**	**2018** **ரூபா**	**2017** **ரூபா**
வருமானம்			
கிறபைட் விற்பனை	10	123,407,840	112,413,523
நேரடிக் கிரயம், அகழ்வுக் கிரயம்	11	(66,216,854)	(66,934,529)
மொத்த இலாபம்/(நட்டம்)		**57,190,986**	**45,478,994**
நானாவித வருமானம்	12	6,160,677	2,459,435
கழி: செயற்பாட்டுக் கிரயம்			
தனியாள் கிரயம்	13	(21,502,843)	(24,895,765)
தாபன மற்றும் நிர்வாகக் கிரயம்	14	(6,468,012)	(6,766,436)
பராமரிப்புக் கிரயம்	15	(981,095)	(440,846)
பயன்பாட்டுக் கிரயம்	16	(631,841)	(544,114)
பெறுமானத்தேய்வுக் கிரயம்	17	(6,496,680)	(6,482,397)
வெளிநாட்டு நாணயமாற்று ஈட்டுகை மீதான ஈட்டுகை / நட்டம்		(2,043,058)	(2,396,026)
விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - பணிக்கொடை		(4,388,750)	(2,597,235)
நிர்வாகக் கிரயம்		(42,512,279)	(44,122,819)
விற்பனை மற்றும் விநியோகக் கிரயம்	18	(2,063,007)	(1,557,958)
ஏனைய கிரயங்கள்	19	(21,622,315)	(376,454)
தொழிற்பாட்டு இலாபம் / நட்டம்		**(2,845,938)**	**(1,881,198)**
சேதம்		(85,885)	(4,403,239)
வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்)		(2,931,823)	2,522,041)
வரி		(1,935,552)	(2,116,283)
பிற்போட்ப்பட்ட வரிச் செலவு ∴ (திருப்பல்கள்)		467,653	3,219,378
வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)		**(4,399,723)**	**(1,418,945)**
ஏனைய விரிவான வருமானம்			
இவ்வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம் / (நட்டம்)			
இவ்வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் / (நட்டம்)		**(4,399,723)**	**(1,418,945)**

கஹடகஹ கிறபைட் லங்காலிமிடெட்

விரிவான வருமானக் கூற்று

மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டு		**2018**	**2017**
			ரூபா
	குறிப்பு	**ரூபா**	
சொத்துகள்			
நடைமுறையல்லாச் சொத்துகள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	20	191,247,967	212,504,875
தொழிற்பாடல்லா சொத்துகள்	21	3,541,760	3,796,760
தெங்குப் பயிற்ச் செய்கை அபிவிருத்தி		1,694,235	1,694,235
பணிக்கொடை முதலீட்டு நிதி		6,587,639	2,932,674
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்		156,380	-
		203,227,982	220,928,545
நடைமுறைச் சொத்துக்கள்			
கையிருப்பு	22	137,035,357	125,652,066
கடன்படுனர்கள், வைப்பு மற்றும் கிடைப்பனவுகள்	23	12,502,892	15,871,697
காசு மற்றும் காசுக்கு சமனானவை	24	8,408,191	7,733,161
		157,946,440	149,256,924
மொத்த சொத்துகள்		361,174,422	370,185,469
உரிமைப் பங்குகள் மற்றும் பொறுப்புகள்			
மூலதனம் மற்றும் ஒதுக்குள்			
குறிப்பிடப்பட்ட மூலதனம்	25	13,000,000	13,000,000
தக்கவைக்கப்பட்ட உழைப்புகள்		316,703,580	321,103,303
		329,703,580	334,103,303
நீண்டகால பொறுப்புகள்			
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	26	-	311,273
பணிக்கொடை ஏற்பாடு	27	14,899,666	10,510,916
		14,899,666	10,822,189
நடைமுறைப் பொறுப்புகள்			
வர்த்தக மற்றும் ஏனைய கடன்படுனர்கள	28	1,596,933	2,622,730
வரியிடலுக்கான ஏற்பாடு	29	4,451,052	7,029,236
அட்டுறு கட்டணங்கள	30	10,523,191	15,608,011
		16,571,176	25,259,977
		361,174,422	**370,185,469**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
பிரதான நிதி உத்தியோகத்தர்

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதுடன் சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

....
தலைவர் பணிப்பாளர்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

உரிமை மூலதன மாற்றக்கூற்று

	பங்கு மூலதனம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	திரண்ட இலாபம்/(நட்டம்)	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2016 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	13,000,000	-	322,522,247	335,522,247
தக்க வைக்கப்பட்ட உழைப்புக்கான மாற்றல்	-	-	-	-
முன்னயை வருட சீரக்கல்	-	-	(1,418,945)	(1,418,945)
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)				
2017 மார்ச் 31 ஆம் திகதியன்று மீதி	13,000,000	-	321,103,303	334,103,303
2017 ஏப்பிரல் 01 ஆம் திகதியன்று மீதி	13,000,000	-	321,103,303	334,103,303
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)	-	-	(4,399,723)	(4,399,723)
31 மார்ச்ச 2018 அன்று மீதி	**13,000,000**	-	**316,703,580**	**329,703,580**

கஹடகஹ கிறபைட் லங்காலிமிடெட்

காசுப்பாய்ச்சற் கூற்று

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	2018 இல. ரூபா	2017 இல. ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்		
வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான தேறிய இலாபம்.˙.(நட்டம்)	(2,931,823)	(2,522,041)
சீராக்கங்கள் :		
பணிக்கொடைக்கான ஏற்பாடு	4,388,750	2,597,235
முன்னைய ஆண்டுச் சீராக்கம்	(5,927,275)	(4,500)
உருவக நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு	21,547,947	21,504,785
தொழிற்பாடல்லாத சொத்துகளின் மீதான சேதம்	85,885	4,403,239
நாணயமாற்ற நட்டம்	(2,043,058)	(2,396,026)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	**15,120,426**	**23,582,692**
இருப்புகள் (அதிகரிப்பு)/குறைவு	(11,128,291)	(25,039,215)
பெறவேண்டியவைகள் (அதிகரிப்பு)/குறைவு	3,368,805	2,723694
கடன்கொடுத்தோரின் (குறைவு) /அதிகரிப்பு	1,025,797	643,926
அட்டுறு செலவினங்கள் (குறைவு) /அதிகரிப்பு	842,455	3,976,247
செயற்பாடுகளில் இருந்து உருவான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்	**7,177,597**	**5,887,344**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	(376,924)	(4,673,399)
பணிக்கொடை முதலீட்டு நிதியம்	(3,654,965)	(932,674)
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்	**(4,031,889)**	**(5,606,073)**
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்		
செலுத்தப்பட்ட வருமான வரி	(4,513,736)	(1,500,000)
செலுத்தப்பட்ட பணிக்கொடை	-	(849,083)
நிதி நடவடிக்கைகளில் இருந்தான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்	**(4,513,736)**	**(2,349,083)**
காசு மற்றும் காசுக்கு சமனானவை மீது வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தின் தாக்கம்	2,043,058	2,396,026
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு)	675,029	(328,214)
ஆண்டின் ஆரம்பத்தில்லான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்	7,733,161	7,404,947
ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்	**8,408,190**	**7,733,161**
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்		
இலங்கை வங்கி - ரிதீகம	2,134,688	(767,813)
இலங்கை வங்கி - கொள்ளுப்பிட்டி	560,113	25,358
டீஎப்சீ டொலர் க/கு இலங்கை வங்கி - கொள்ளுப்பிட்டி	5,691,738	6,890,560
சில்லறைக் காசு - தலைமை அலுவலகம்	5,886	27,716
சில்லறைக் காசு - சுரங்க அலுவலகம்	15,765	21,714
	8,408,191	**7,733,161**

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

2018 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்புகள்

1. கூட்டமைப்புத் தகவல்கள்

1.1 பொது

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் முன்னர் "மக்கள்" மயமாக்கப்பட்ட கம்பனியாகக் காணப்பட்டதுடன் 1996 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பொது முயற்சிகள் அதிகாரச்சட்டத்தின் மீளமைக்கப்பட்டு அரசாங்கத்துடன் 1997 ஆம் ஆண்டில் மீள உரித்தளிக்கப்பட்டது. தற்போது முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான வணிக நிறுவகமாகச் செயற்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டிய,கொழும்பு – 05 இல் அமைந்துள்ளது.

1.2 முக்கிய நடவடிக்கைகளும் செயற்பாட்டின் தன்மையும்

காலப்பகுதியின் போது நிறுவகத்தினால் காரீய உற்பத்தியும் ஏற்றுமதியும் முக்கிய நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

1.3 பணிப்பாளர் பொறுப்புக் கூற்று

பணிப்பாளர் சபை நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பொறுப்புடையதாகும்.

1.4 ஒப்பீட்டுத் தொகைகள்

முன்னைய ஆண்டிற்கான தொகைகளும் கூற்றுக்களும் நடைமுறை ஆண்டிற்கான வெளிப்படுத்தலுடன் இணங்கும் வகையில் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.1 தயாரிப்பின் அடிப்படை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி வரலாற்றுக் கிரய அளப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிடப்ப ட்டிருந்தால் அன்றி இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.2 இணக்கக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் விநியோகிக்கப்பட்ட எஸ்எல்எப்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ் அடங்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, (இதன் பின்னர் எஸ்எம்ஈ இற்காக எஸ்எல்எப்ஆர்எஸ்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக்கூற்றுக்கள் ஒரு ஆண்டிற்கான (2017) ஒப்பீட்டுத் தகவலை மாத்திரமே உள்ளடக்கியுள்ளன. நிறுவனம், பரிவர்த்தனையின் போது கிரயமாகக் கருதப்படும் நியாயப் பெறுமதியையும் கிரயமாகக் கருதப்படும் மீள்மதிப்பீட்டையும் கிரயமாகக் கருதுவது விலக்களிக்கப்பட்டமையால் நியாயப் பெறுமதியையும் மீள்மதிப்பீட்டையும் பிரயோகிப்பதற்கு தெரிவுசெய்திருக்கவில்லை.

கம்பனி 2017 ஏப்ரல் 01 ஆம் திகதியில் உள்ளவாறான அதன் ஆரம்ப நிதி நிலைமைக் கூற்றறைத் தயாரிக்கும் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கையையே இக் கொள்கைகள் எப்போதும் அமுலில் இருந்தமையால் தொடர்ந்து சமர்ப்பித்த அனைத்துக் காலப்பகுதியின் போதும் பிரயோகித்துள்ளது.

2.3 முக்கியமான கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எதிர்வுகூறல்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு அறிக்கையிடப்பட்ட வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதனுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகளின் வெளிப்படுத்தல்களிற்கு தாக்கம் செலுத்துபவை குறித்து முகாமைத்துவத்தின் முக்கிய தீர்வுகளையும் மதிப்பீடுகளையும் எதிர்கூறல்களையும் மேற்கொள்வதற்கு உதவுகின்றன. இவ் எதிர்வுகூறல்களினதும், மதிப்பீடுகளினதும் நிலையற்ற தன்மை எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் கொண்டுசெல்லல் தொகைகளிற்கு ஓர் பொருண்மையான சீராக்கம் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

தீர்வுகள்

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் நடைமுறைப்படுத்துவம் செயற்பாட்டில் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் மீது பாரிய தாக்கத்தைச் விளைவிக்கக்கூடியவற்றில்முகாமைத்துவம் பின்வரும் தீர்வுகளை எடுத்துள்ளது.

அ. ஆதன வகைப்படுத்தல்

ஓர் ஆதனம் முதலீட்டு ஆதனமாக அல்லது ஓர் உரிமையாளரால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து கம்பனி தீர்மானிக்கின்றது. வுழமையான வியாபார நடவடிக்கையில் விற்பனைக்காக அன்றி முதன்மையாக வாடகை வருமான உழைப்பிற்காகவும் மூலதன மதிப்பீட்டிற்காகவும் உள்ளவையாகும். நிறுவகம் கொண்டுள்ள ஏனைய சொத்துக்களிற்கு பாரியளவில் சுயாதீனமான முறையில் ஆதனம் காசுப்பாய்ச்சல்களை உருவாக்குகின்றதா என்பது குறித்து கருத்திற்கொண்டு ஓர் ஆதனம் முதலீட்டு ஆதனமாக தகமை பெறுகின்றதா என்பதை கம்பனி தீர்மானிக்கின்றது. ஆதனத்திற்கு மட்டுமன்றி உற்பத்தி அல்லது விநியோக நடைமுறையில் பயன்படுத்தப்படும் மற்றைய சொத்துக்களுக்கும் காசுப்பாய்ச்சலை ஏற்படுத்துவதற்குக் காரணமானஉரிமையாளரால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆதனம். சில ஆதனங்களின் ஓர் பகுதி வாடகை வருமானத்தை உழைப்பதற்காகஅல்லது மூலதன ஆக்கத்திற்காகவும் மற்றைய பகுதி நிர்வாக நோக்கங்களிற்காக அல்லது பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்கலுக்காக அல்லது உற்பத்திக்காக வைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இப் பாகங்கள் வெவ்வேறாக விற்பனை செய்யப்பட முடியுமாயின் (வெவ்வேறாக நிதிக் குத்தகையின் கீழ் வெவ்வேறாக குத்தகைக்கிடப்பட முடியுமாயின்) அல்லது பாகங்களிற்காக தனியாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இயலுமாயின் ஆகும். பாகங்கள் வெவ்வேறாக விற்பனை செய்யப்பட முடியாவிடின், குறிப்பிடத்தக்க வகையில் அல்லாத பாகம் நிர்வாக நோக்கங்களிற்காக அல்லது
பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்கலில்அல்லது உற்பத்திப் பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்ளப்பட்டிருப்பின் மாத்திரமே ஓர் முதலீட்டு ஆதனமாகக் கணக்கீடு செய்யப்படுகின்றது. ஓர் ஆதனம் முதலீட்டு ஆதனமாக தகமை பெறாமைக்கு துணைச் சேவைகள் முக்கியம் பெறுகையில் இதனை நிர்ணயிப்பதற்காக தீர்வு பிரயோகிக்கப்படுகின்றது. கம்பனி அதன் தீர்வை முன்வைக்கையில் ஒவ்வொரு ஆதனம் குறித்தும் வெவ்வேறாக கருத்திற்கொள்கின்றது.

ஆ. மதிப்பீடுகளும் ஊகங்களும்

அடுத்துவரும் நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லல் தொகையில் ஓர் முக்கிய சீராக்கத்தை விளைவிக்கும் ஓர் முக்கிய இடரைக் கொண்ட எதிர்காலம் குறித்த முக்கிய எதிர்வுகூறல்களும் அறிக்கைத்திகதியில் உறுதியற்ற மதிப்பீட்டுடனான ஏனைய முக்கிய விடயங்களும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கம்பனி தனது ஊகங்களையும் அளவீட்டு மதிப்பீடுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இருப்பினும், எதிர்கால அபிவிருத்திகள் குறித்த

தற்போதைய சூழல்களும் ஊகங்களும் கம்பனியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சந்தை மாற்றங்கள் அல்லது சூழல்களின் காரணமாக மாற்றமடையக் கூடும். அத்தகைய மாற்றங்கள் அவை ஏற்படுகையில் ஊகங்களில் பிரதிபலிக்கப்படுகின்றன.

இ. வரிகள்

இழப்புகள் பயன்படுத்தப்படக்கூடிய வகையில் வரிக்குட்பட்ட இலாபம் உள்ளவரையில் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளுக்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் நிலை மற்றும் வாய்ப்பு நேரத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களின் தொகையை நிர்ணயிப்பதற்கு பாரிய முகாமைத்துவத் தீர்வு தேவைப்படுகின்றது.

ஈ. ஊழியர் நலன்கள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக்காக எஸ்எல்எப்ஆர்எஸ் 28 ஆல் பரிந்துரைக்கப்பட்டவாறு திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறைமைப் பயன்படுத்திய வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட நலன்திட்டமான ஓய்வூதிய பணிக்கொடை நலன்களின் தற்போதைய பெறுமதியை கம்பனி அளவிடுகின்றது.

உ. நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் காணப்பட்ட நிதிசாராச் சொத்துக்களிற்காக பெறுமதி இழப்பிற்கான அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என்பது குறித்து கம்பனி மதிப்பீடு செய்கின்றது. கொண்டு செல்லப்பட்டுள்ள தொகைகள் அறவிடப்பட முடியாமைக்கான அறிகுறிகள் காணப்படுகையில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழப்பிற்காக பரீட்சிக்கப்படுகின்றது.

